1995 நவம்பர் 10]

(அ) சேலம் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு வெறிநோய் தடுப்பு மருந்து அளிக்கும் திட்டத்தினைச் செயற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எம். சி. தாமோதரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சேலம் நகராட்சிப் பகுதியில் வெறிநோய்த் தடுப்புத் திட்டம் செயல்படுத்தும் கருத்துரு அரசின் ஆய்வில் இருந்து வருகிறது.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, சேலம் மாவட்டத்தில் வெறிநோய் தடுப்புப் பணி முழுமையாக செயல்படுத்தப்பட்டு, அதாவது 100 பர்சென்ட் கவரேஜ் கொடுத்து, குறித்த காலத்திற்குள் வெறிநோய் முற்றிலுமாக அழிக்கப்பட்டுவிட்டது என்ற ஒரு நிலைமையை உருவாக்க நமது அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆலோசனைப்படி சேலம் நகராட்சியில் இந்த வெறிநோய்த்தடுப்புத் திட்டத்தைச் செயல்படுத்த அரசுக்கு ஆகும் செலவு மொத்தம் ரூபாய் மூன்று லட்சம். இதில், தொடரும் செலவினமாக இரண்டரை லட்சமும், தொடராச் செலவினமாக ரூபாய் ஐம்பது ஆயிரமும் செலவு ஆகும். இதற்கான ஆய்வு நடத்தப்பட்டு இதனை முதன்முதலாக சேலம் நகராட்சியில் செயல்படுத்தி எதிர்காலத்தில் பேரூராட்சி மற்றும் இதர இடங்களில் எடுத்துச் செயல்படுத்தவும் அரசு ஆய்வு செய்து வருகிறது. இதற்கான செயற்குறிப்பு நிதித்துறைக்கு அனுப்பப்பட்டு விரைவில் இது முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெறிநோய் என்பது மிகவும் கொடிய நோய். It is a viral disease. மூளை, நரம்பு மண்டலம் ஆகியவற்றை பாதித்து நோய் கண்ட 10 நாட்களுக்குள் இறப்பு உறுதி என்ற நிலையில் prevention is better than cure என்பதைக் கருத்தில் கொண்டு கால்நடைகளுக்கு மட்டுமல்லாமல் மனித உடலுக்கும்

இதே கூற்று பொருந்துவதால் கால்நடை பராமரிப்புத் துறையும் மருத்துவத் துறையும் இணைந்து நடத்துவதுபோல் ஒரு திட்டத்தை Special intensive drive அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்துவதன் மூலம் வெறிநோயை முற்றிலுமாக ஒழிக்க அரசு விரைந்து நடவடிக்கை எடுத்துச் செயல்படுத்துமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-20

மாண்புமிகு திரு. எம்.சி. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 1984-ஆம் ஆண்டு முதல் கோவை மாநகராட்சியில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. 1992-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி எல்லைக்குள்ளும் திருச்சி நகராட்சிப் பகுதியிலும் இது விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. பகுதி 2 திட்டத்தின் கீழ் மாநில அரசின் திட்டமாக 1992-ல் மதுரையிலும் 1993-ல் திருநெல்வேலியிலும் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டு நல்லமுறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மேலும் இந்தத் திட்டத்தை மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் விரிவுபடுத்த வேண்டும் என்று ஆலோசனை தெரிவித்ததற்கிணங்க அவரது உத்தரவின்படி இந்தத் திட்டம் சேலம், தஞ்சாவூர், கடலூர், காஞ்சிபுரம், வேலூர், ஈரோடு ஆகிய நகராட்சிப் பகுதிகளுக்கும் தற்போது விரிவுபடுத்தப்பட அரசின் ஆய்வில் இருந்து வருகிறது. இது விரைந்து செயல்படுத்தப்படும். இதற்கு மத்திய அரசு 50 விழுக்காடும், மாநில அரசு 50 விழுக்காடும் நிதியுதவி செய்து கொண்டிருக்கிறது. இந்தத் திட்டம் சிறப்பாக புரட்சித் தலைவியின் அரசில் செயல்படுத்தப்பட இருக்கிறது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 100, திரு. இரா. அப்பு நடேசன், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

100—

மருந்துவாழ்மலைக் கோவிலுக்கு நிலம் வழங்குதல்

35594*—திரு. இரா. அப்பு நடேசன்:**

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1995 நவம்பர் 10]

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மருந்துவாழ்மலைக் கோவிலுக்குச் சொந்தமான 627 ஏக்கர் நிலம் புறம்போக்காக மாற்றப்பட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அந்நிலத்தை கோவிலுக்கே வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தேவஸ்வம் புறம்போக்காக மாற்ற தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் கோயில்கள் மிகவும் பின்தங்கி இருந்தன. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் தான் அந்த மாவட்டத்திற்குப் பல நன்மைகள் செய்து வருகிறார்கள். இந்தக் கோயிலுக்குச் சொந்தமான 627 ஏக்கர் நிலத்தைப் புறம்போக்கு நிலமாக மாற்றி இருக்கிறார்கள். அது இப்போது என்ன நிலையில் இருக்கிறது? ஏன் மாற்றினார்கள்? கோயிலுக்குச் சொந்தமான அந்த நிலத்தை உடனடியாகக் கோயிலுக்குத் தர ஏற்பாடுகள் செய்யப்படுமா என்பதை அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுசீந்திரம் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில் பிரிவில் மருந்துவாழ்மலை தேவஸ்தானம் உள்ளது. இது அகஸ்தீஸ்வரர் கோயில் உட்பிரிவைச் சார்ந்தது. இத்திருக்கோயில் கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரம் கிராமத்தில் உள்ளது. மேற்படி கிராமத்தில் உள்ள பழைய சர்வே எண் 770/1-ல் 626.01 ஏக்கர் நிலம் இந்தத் திருக்கோயிலுக்குப் பாத்தியப்பட்டதாக இருந்தது. 1-11-1956-ல் கன்னியாகுமரி மாவட்டம், தமிழ்நாட்டுடன் சேர்ந்தபிறகு கன்னியாகுமரி மாவட்டத்தில் வருவாய்த் துறையினரால் மறு நில அளவீடு செய்தபோது இந்தத் திருக்கோயில் அதாவது அருள்மிகு பெட்டி மருந்துவாழ் மலைத் திருக்கோயில் அமைந்துள்ள 3

சென்ட் நிலம் தவிர மற்ற நிலங்கள் அனைத்தும் ரெவின்யூ புறம்போக்கு என்று வருவாய்த்துறை பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி திருக்கோயில் தொடர்பாக நிலப்பதிவேடு திருவிதாங்கூர் அரசின் தனி வட்டாட்சியரால் தயார் செய்யப்பட்டபோது மேற்படி சர்வே எண் 770/1-ல் உள்ள நிலங்கள் மருந்துவாழ் மலை திருக்கோயிலின் தடையற்ற அனுபோகத்தில் இருப்பதாக பரிந்துரை செய்துள்ளார்கள். ஆனால் 1-11-1956-க்குப் பிறகு மறு நில அளவீடு செய்யப்பட்டபோது. மேற்படி நிலம் தொடர்பாக அதற்கு முன்பிருந்த பதிவேடுகளைக் கருத்தில் கொள்ளாமல் வருவாய்த் துறை பதிவேட்டில் சர்வே எண் 770/1-ல் உள்ள 626.01 ஏக்கர் நிலத்தில் திருக்கோயில் அமைந்துள்ள 3 சென்ட் நிலம் தவிர்த்து ஏனைய நிலங்கள் ரெவின்யூ புறம்போக்கு என தவறுதலாகக் குறிப்பிடப்பட்டு உள்ளதால், மிகுந்த விலைமதிப்புள்ள அந்த நிலங்களைத் திருக்கோயில் இழக்க வேண்டியதாயிற்று. இந்த நிலையில் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான சர்வே எண் 770-ல் உள்ள 626.01 ஏக்கர் நிலத்தை திருக்கோயில் பெயரில் தேவஸ்வம் புறம்போக்காகத் திருத்தம் செய்ய வேண்டி. உதவி நிலவரித் திட்ட அலுவலருக்கு அறிக்கை அனுப்பியதன் பேரில் நிலவரித்திட்டம் அமல் செய்யப்பட்டு அனைத்து ஆவணங்களும் வருவாய்த்துறை வசம் ஒப்படைக்கப்பட்டுவிட்டதாகத் தெரிவித்தார்கள். அதன்பேரில் சுசீந்தரம் துணை ஆணையாளர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவருக்கு 9-1-94 மற்றும் 5-2-94-ல் மேற்படி சர்வே எண் 770-ல் உள்ள 626.01 ஏக்கர் நிலத்தை தேவஸ்வம் புறம்போக்காக மாற்றியமைக்க உத்தரவு பிறப்பிக்குமாறு விண்ணப்பித்து உள்ளார்கள். துணை ஆணையாளர் அறிக்கையின்பேரில் இப்பொருள் தொடர்பாக இந்துசமய அறநிலையத்துறை ஆணையாளர் அவர்களும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஆணை பிறப்பிக்கக் கேட்டுக்கொண்டுள்ளார்.

முற்பகல் 11-25

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவிலுக்குச் சொந்தமான இதுபோன்ற நிலங்களை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்துசமய அறநிலையத்துறை அமைச்சரிடமிருந்து வருவாய்த்துறை அமைச்சருக்கு ஒரு விண்ணப்பம் வந்திருக்கிறது. வருவாய்த்துறை அமைச்சர் அதைப் பரிவோடு கவனிக்கலாம்.

TRUTH ALONE TRIUMPHS